**sns academy**

**an International CBSE Finger Print School**
**Coimbatore**

## உறவுமுறைக் கடிதம்

**புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

12, தென்றல் நகர்,

திருத்தணி-1.

அன்புள்ள அண்ணனுக்கு,

தங்கள் அன்புத் தம்பி தமிழ்வேந்தன் எழுதும் மடல். நலம், நலமறிய ஆவல். தங்களைச் சந்தித்து நீண்ட நாட்கள் ஆகியிருப்பினும், தங்களை அவ்வப்போது நினைவு கூர்வதுண்டு. எனது தமிழ்த் தேடலுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி ஒன்று தேவைப்படுகிறது. எங்கள் ஊரில் அது கிடைக்கவில்லை. தாங்கள் வசிக்கும் திருவல்லிக்கேணி வள்ளுவர் பதிப்பகத்தில் கிடைப்பதாக அறிந்தேன். ஒரு பிரதியை வாங்கி அஞ்சல் மூலம் அனுப்புமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

தங்கள் அன்புத் தம்பி,

தமிழ்வேந்தன்.

உறைமேல் முகவரி:

பெறுநர்

சொற்கோ,

54, மறவன் வீதி,

திருவல்லிக்கேணி,

சென்னை-14.

## அலுவலகக் கடிதம்

**நூலக வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்குக் கடிதம் எழுதுக.**

**(உன் முகவரி பா.அன்பு, 3, காமராாசர் நகர், ஊரணி, மதுரை எனக் கொள்க.)**

அனுப்புநர்

பா.அன்பு,

3, காமராாசர் நகர்,

ஊரணி,

மதுரை.

பெறுநர்

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

மதுரை.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: நூலகம் அமைத்துத் தருவது தொடர்பாக…

வணக்கம். நான் மதுரை அருகில் உள்ள ஊரணி கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் ஏறத்தாழ ஆறாயிரம் பேர் வசிக்கிறோம். பணிக்காகப் படித்துக் கொண்டிருக்கும் இளைஞர்கள் பலர் உள்ளனர். அவர்களின் வேலை வாய்ப்பிற்காகவும் பொது அறிவைப் பெருக்கவும் செய்திகளை அறியவும் எங்கள் ஊருக்கு நூலகம் ஒன்று அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்குத்,

தங்கள் உண்மையுள்ள,

பா.அன்பு.

இடம்: மதுரை,

நாள்: 13-07-2024.

உறைமேல் முகவரி

பெறுநர்

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

மதுரை.